**வணிக வழக்குக்கான சார்பு  நீதிமன்றம்,**
**ஸ்ரீ னிவாசபுரம், காந்திபுரம்,**
**கோயம்புத்தூர்.**

C.O.S.No. 282  Of 2025

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள்  18- வது நாள் புதன்கிழமை 1969 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் **திரு.சி.பி.வேதகிரி.,பி.பார்ம்.,எம்எஸ்-ஐடி(ஆஸ்திரேலியா).,எல்எல்எம்.,** நீதிபதி, வணிக நீதிமன்றம், (சார்பு நீதிபதி), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Mrs. Deepa | கிராமம்: | |
| க.பெ. (அ) த.பெ. | Mr. Ragavendra Rahul | வேலை: | Proprietor, M/s. Pentacle Newyork Company. |
| வயது | 29 | செல்போன் எண் | |

வா.சா.1    **Mrs. Deepa**    ஆக 18.02.2026 அன்று ஆஜராகி

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் வாதி. எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை எழுத்துபூர்வமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் உண்மைதான்.சங்கதிகளை நான் அறிவேன். நிரூபண வாக்குமூலத்தில் நான் கையொப்பமிட்டுள்ளேன். அதிலுள்ள  கையெழுத்து என்னுடையது தான்.

1. **16.06.2023** – Memorandum of understanding agreement - Orginal - **Ex.A1** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

2. **02.04.2025** – Memorandum of understanding agreement Notarized and original copy with 2nd defendant - Orginal - **Ex.A2** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

3. Plaintiff received Cheque for incase of default of payment on 02.04.2025 for Rs.50,000/- - Photo copy - **Ex.A3** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

4. Bank Statement for three months (08.04.2025 to 11.07.2025) – System copy - **Ex.A4** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

5. **11.03.2025 –** Legal notice sent by Plaintiff to Defendant **–** Office copy - **Ex.A5** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

6. **16.05.2025** – Legal Notice by 2nd defendant - Original - **Ex.A6** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

7. **23.05.2025** – Reply notice by Plaintiff - Office copy - **Ex.A7** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

8. **12.03.2025 & 23.05.2025** – Sender's receipt and acknowledgement card for Legal notice and reply notice - Original - **Ex.A8** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

**9.** Registration Certificate of Plaintiff company **–** System copy - **Ex.A9** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

10. **01.07.2023** – Non Starter report – Original – Original - **Ex.A10** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

பிரதிவாதி ஆகிய சக்திவேல் உங்கள் நிறுவனத்தின் ஊழியர் என்று சொன்னால் சரிதான். வாதி நிறுவனத்தில் எத்தனை நபர்கள் பணியில் உள்ளார்கள் என்றால் 15

நபர்கள் பணியில் இருக்கிறார்கள். கடந்த 16.06.2023 தேதியிட்ட வா.சா.ஆ.1 தொழில் ஒப்பந்தமானது நீங்களும் உங்களது ஊழியருமான பிரதிவாதி சக்திவேல் உடன் ஏற்படுத்திக் கொண்டது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஒப்பந்தத்தில் NSR Decor என்றோ, அதன் உரிமையாளர் பிரதிவாதி என்றோ குறிப்பிட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரிதான், ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட சமயத்தில் GST கிடையாது, அதன் பின்பு தான் எங்களது Auditor மூலம் விண்ணப்பித்து பிரதிவாதி நிறுவனத்திற்கு GST பெறப்பட்டது. வாதி நிறுவனத்தில் பிரதிவாதி ஊழியராக சேர்ந்த சமயத்தில் அவருக்கு ரூபாய்.15,000/- சம்பளமாக இருந்தது என்றால் சரிதான். கடந்த 16.06.2023 தேதியிட்ட வா.சா.ஆ.1 தொழில் ஒப்பந்தமானது உங்கள் நிறுவனத்திற்கு வேலைக்கு அமர்த்தப்படும் ஊழியர் பெயரில் தனி நிறுவனம் ஆரம்பிப்பதும், அதன் பொருட்டு GST பெறப்படுவதும், வங்கி கணக்கு ஆரம்பிக்கப்படுவதும், காசோலை வசதி பெறப்படுவதும், அனைத்து ஆவணம் மற்றும் வங்கி விவரங்கள் வாதி நிறுவனம் வசம் இருக்க வேண்டும் என்றும், சம்பந்தப்பட்ட ஊழியர் தனிப்பட்ட முறையில் எந்தவொரு வங்கி பரிவர்த்தனையோ வியாபார பரிவர்த்தனையோ வாதி சார்பிலோ அல்லது ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம் சார்பிலோ மேற்கொள்ள கூடாது என்பது சரத்தாகும் என்றால் சரிதான். பிரமாணவாக்குமூலம் பத்தி 3 (a)ல் பிரதிவாதி GST மற்றும் வங்கி விவரங்களை ஒப்புக்கொண்டு தான் வாதியிடம் அளித்தார் என குறிப்பிட்டு சொல்லி உள்ள நிலையில் மேற்படி விவரங்களை பிராதிலோ வா.சா.ஆ.5 சட்ட அறிவிப்பிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஒப்பந்தத்தில் பிரதிவாதி பெயரில் GST பெற சம்மதம் தெரிவிப்பதாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் அந்த சமயத்தில் GST பதிவு கட்டாயம் அல்ல. நீங்கள் சொல்வது போல் வா.சா.ஆ.1 ஏற்படுத்தப்பட்ட சமயத்தில் GST பதிவு கட்டாயம் அல்ல என்று சொல்வது தவறு, ஒரு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டால் GST பதிவு கட்டாயம் செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதி பெயரில் ஆரம்பிக்கப்படும் நிறுவனம் என்பது Online மூலமாக உங்களது Design, தயாரிப்பு, Products விற்பதற்காக ஏற்படுத்தப்படும் என்றால் சரிதான். உங்களது ஊழியர் பெயரில் நிறுவனம் தொடங்குவதும், அதற்கு GST பெறுவதும், அதில் வங்கி பரிவர்த்தனை செய்வதும் தவறு அதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தமான வா.சா.ஆ.1 தொழில் ஒப்பந்தம் சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல, பிரதிவாதி விருப்பப்பட்டு தான் வா.சா.ஆ.1 ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது, பிரதிவாதி தவிர வேறு எந்த ஒரு ஊழியர் பெயரிலும் இது போல் வாதி நிறுவனம் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டது இல்லை. சாட்சி மீண்டும் தங்களுக்கு தெரிந்த 3

ஊழியர்கள் பெயரில் வா.சா.ஆ.1 ஒப்பந்தம் போல் ஏற்படுத்திக் கொண்டதாக தெரிவித்தார். வா.சா.ஆ.1 ஒப்பந்தம் பிரதிவாதியின் ஒப்புதலின் அடிப்படையில் ஏற்படுத்தப்படுவதாக சொல்வது தவறு, உங்களது நிறுவனத்தின் வேலையே ஊழியர்களை பணியில் எடுத்து அவர்கள் பெயரில் சட்டத்திற்கு புறம்பாக ஆவணங்கள் ஏற்படுத்தி சட்டவிரோத வியாபார பரிவர்த்தனை செய்து வருவது தான் என்றால் சரியல்ல, நான் 4 இலட்சம் முதலீடு செய்த பணத்தில் Online store நன்கு வளர்ந்த தருணத்தில், பிரதிவாதி தான் Online store ஐ தனது வசம் ஆக்கிக்கொண்டார். தாவாவில் முதலில் பிரதிவாதியே ஊழியர் என்ற ஓதாவில் வழக்காடிவிட்டு பிறகு NSR Decors நிறுவனத்தின் உரிமையாளர் என்ற ஓதாவில் வழக்காடுவது சட்டத்திற்கு புறம்பபானது என்று சொன்னால் சரியல்ல. வாதி நிறுவனம் தான் பிரதிவாதி நிறுவனத்தை ஆரம்பித்தது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 தேதியான 16.06.2023 ல் இருந்து உங்களது சட்ட அறிவிப்பு தேதியான 11.03.2025 வரை வாதி நிறுவனம் தொடங்கிய பிரதிவாதி நிறுவனம் பெயரான NSR Decors என எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், அந்த சமயத்தில் GST கட்டாயம் கிடையாது. வா.சா.ஆ.1 ஒப்பந்தத்தில் NSR Decors என குறிப்பிடாமலும், அதன் தொடர்ச்சியாக என்ன வியாபாரம் செய்யப்போகிறோம் என்ற விவரத்தை குறிப்பிடாமலும் ஏற்படுத்தப்பட்ட காரணத்தினாலும் வா.சா.ஆ. 1 ஒப்பந்தம் செல்லத்தக்கது அல்ல அதன் அடிப்படையில் பிரதிவாதிக்கு எதிராக எந்த பரிகாரமும் கோர இயலாது என்றால் சரியல்ல. பிரதிவாதி உங்கள் நிறுவனத்தின் பணியில் இருந்து நின்ற சமயத்தில் PF பிடித்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், அவர் எங்கள் நிறுவனத்தில் இருந்த முன்பணமாக ரூபாய்.65,000/- வாங்கி இருந்தார். பிராதில் பிரதிவாதியின் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனத்தில் ரூபாய் 10 இலட்சம் முதலீடு செய்ததாக சொல்வதற்கு ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை, ஆவணம் என் வசம் உள்ளது, தாக்கல் செய்ய இயலும். கடந்த 02.04.2025 தேதியிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பிரதிவாதிக்கு Designs கொடுத்துவிட்டால் அவர் ரூபாய்.4 இலட்சம் தருவதாக கண்டுள்ளது என்றால் சரிதான், பிரதிவாதி 4 இலட்சத்தில் 50 ஆயிரம் மட்டும் தந்துள்ளார். முதலில் நான் முதலீடு செய்த 10 இலட்சத்தை கேட்கப்பட்டு, இரு தரப்பினரும் பேசப்பட்டு தான் வா.சா.ஆ.2 ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. 4 இலட்சம் தொகையானது Designs அல்லாது online shopping, Marketing போன்றவற்றிற்க்கும் சேர்ந்தது, அறிவிப்பில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. மேற்படி விவரம் வா.சா.ஆ.2 ஒப்பந்தத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். Designs

பிரதிவாதிக்கு கொடுத்ததற்கு ஏதேனும் ஆதாரம் உள்ளதா (E mail, Notice) என்றால் Designs என் வசம் தான் Pendrive ல் உள்ளது, பிரதிவாதி அதை வாங்க மறுத்துவிட்டார். அதேபோல் ஒப்பந்தத்தில் அல்லாத Source file பிரதிவாதி கேட்டதால் தான் பிரச்சனை ஆனது, அதையும் வாங்கவும் மறுத்துவிட்டார். பிரதிவாதிக்கு நீங்கள் Designs ஐ நீங்கள் கொடுக்க முற்பட்டு அதை பிரதிவாதி வாங்க மறுத்துவிட்டார் என்றும், அதேபோல் வா.சா.ஆ. 2 ல் அல்லாத பிரதிவாதிக்கு நீங்கள் Source file ஐ நீங்கள் கொடுக்க முற்பட்டு அதை பிரதிவாதி வாங்க மறுத்துவிட்டார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல, சாட்சி தற்சமயம் Designs ஐ பிரதிவாதிக்கு வா.சா.ஆ.2 ஏற்படுத்தப்பட்ட சமயத்திலே கொடுத்துவிட்டதாகவும், Source file ஐ முதல் Mediation ல் கொடுப்பதாக ஒப்புக்கொண்டும், 2 வது Mediation ல் அதை வாங்க மறுத்துவிட்டார். பிரதிவாதி தனக்கு Designs கொடுக்க சொல்லி அளித்த pendrive தற்சமயம் உங்களிடம் உள்ளது என்றால் சரிதான், Designs உடன் Source file ஐயும் கேட்டு அவர் தான் pendrive தந்தார். பிரதிவாதி Source file ஐ கேட்கவில்லை, தற்சமயம் வரை நீங்கள் Designs ஐ பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை அதனால் பிரதிவாதி உங்களுக்கு 4 இலட்சம் தரவேண்டியதில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஒப்பந்தத்தில் பத்தி 6 ல் 28.11.2022 முதல் 10.10.2024 வரை பிரதிவாதி நிறுவனத்தை நிர்வகித்த காலத்தில் நடைபெற்ற வர்த்தக பரிவர்த்தனை சம்பந்தமாக GST, IT அல்லது வங்கி பிரச்சனை ஏற்படுமாயின் அதை வாதி நிறுவனம் முன் நின்று தீர்த்து வைக்கவேண்டும் என சரத்து கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி காலகட்டத்தில் பிரதிவாதி நிறுவனம் சார்பாக நீங்கள் செய்த வியாபார பரிவர்த்தனை விவரமானது பிரதிவாதி நிறுவனம் சார்பாக நீங்கள் திறந்த வங்கி கணக்கின் பட்டியலை பார்த்தால் தெரிந்துவிடும் என்றால் சரிதான், பிரதிவாதியின் தனிப்பட்ட பெயரிலும் வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டது. பிரதிவாதியின் தனிப்பட்ட பெயரில் வர்த்தகம் மேற்கொள்ளப்படவில்லை, NSR Decors பெயரில் மட்டும் தான் வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல, GST அல்லாத சமயத்தில் பிரதிவாதியின் தனிப்பட்ட பெயரிலும் வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டது. ஜனவரி 2023 ல் பிரதிவாதி உங்கள் நிறுவனத்தில் பணியில் சேர்ந்தார் என்றால் சரிதான். 2023 ல் இருந்து 10.10.2024 வரை பிரதிவாதி நிறுவனம் பெயரில் நீங்கள் மேற்கொண்ட வியாபார பரிவர்த்தனைக்கு 18% GST செலுத்தப்பட வேண்டும் என்றால் தேவையில்லை, அனைத்து பரிவர்த்தனைகளும் Export Sales ஆகும், அதனால் தனக்கு தாக்கல் செய்தால் போதும், GST தாக்கல் செய்வதற்கும் பிரதிவாதி

ஆவணங்கள் எங்களுக்கு தரவில்லை. NSR Decors நிறுவனம் பெயரில் வர்த்தகம் செய்துவிட்டும், Purchase order ஏற்படுத்தியும், NSR Decors நிறுவனம் சார்பாக பணத்தை பெற்றுக்கொண்டும், NSR Decors நிறுவனம் பெயரில் invoice ஏற்படுத்தாமல், வாதி நிறுவனம் பெயரில் Export Sales invoice ஏற்படுத்தி பொருட்களை வெளிநாட்டிற்கு அனுப்பி உள்ளதால் வாதி நிறுவனம் சட்டப்படி 18% GST செலுத்த கடமைப்பட்டவர் என்றால் பிரதிவாதி உரிய ஆவணம் தராததால் அவர் பெயரில் invoice ஏற்படுத்தப்படவில்லை. பிரதிவாதி நிறுவனத்தையே வாதி நிறுவனம் தொடங்கி உள்ள நிலையில் பிரதிவாதி உரிய ஆவணம் தராததால் அவர் பெயரில் invoice ஏற்படுத்தப்படவில்லை என வழக்கிற்காக பொய் சொல்லுகிறீர்கள், வரி ஏய்ப்பு செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதி நிறுவனத்தின் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட வங்கி கணக்கிற்கு வாதி நிறுவனத்தி மின்அஞ்சல் முகவரி வங்கிக்கு கொடுக்கப்பட்டது என்றால் அதை பிரதிவாதி எங்களுக்கு தெரியாமல் கொடுத்திருப்பார். பிரதிவாதியின் GST கணக்கிற்கு மின்அஞ்சல் மூலமாக யாருக்கு OTP வரும் என்றால் பிரதிவாதிக்கு தான் வரும். பிரதிவாதியின் GST கணக்கிற்கு மின்அஞ்சல் மூலமாக வாதி நிறுவனத்திற்கு தான் OTP வரும் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு நீங்கள் இதுநாள் வரை Designs கொடுக்காததால் தாவாவில் கோரி உள்ள பரிகாரம் உங்களுக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஒப்பந்தம் வணிக நோக்கம் கொண்டது அல்ல, அதன் அடிப்படையில் இந்த நீதிமன்றத்தில் இந்த தாவா தாக்கல் செய்திருப்பது நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட நிறுவனம் GST சட்டத்திற்கு புறம்பானது, வாதி நிறுவனம் முறைப்படி GST அலுவலகத்தில் தான் மேற்கொண்ட பரிவர்த்தனைக்கு GST செலுத்த வேண்டும் என்றால் சரியல்ல, பிரதிவாதி எனக்கு 18 % GST தொகை கொடுத்தால் தான் நான் செலுத்த இயலும். வாதி தொடங்கிய நிறுவனத்திற்கு வாதி தான் GST செலுத்த வேண்டும் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in open Court read over to the Witness and admitted by the witness to be Correct.

CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI

Digitally signed by CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI
Date: 2026.02.18 18:56:28 +0530

Judge,
Commercial Court,
(Senior Civil Judge Cadre),
Coimbatore.